# தூது 2

★ நவம்பர்: 1983 ★

## பரிமாற்றம்.

நிகழ்வுகளைத் தரிசனம் செய்யும் செயல்களில் மட்டுமன்றி கற்பனை, உருவக, வர்ணனை ஆகியவற்றிலும் கூட புதுக்கவிதை தன் ஆற்றலைக் காண்பித்துவிட்டபோதிலும், இன்னும் பழைய மரபுப்போர்வையை போர்த்திக் குளிர் காய்கின்றவர்கள் புதுக் கவிதையின் கழுத்தை நெரிக்க முயல்வது வேடிக்கைக்குரியதுதான்.

மூலைக்கு மூலை இலக்கியக் கூட்டங்களில் இலக்கியம் பேசுவதாய் எண்ணிப் புதுக்கவிதைகளையும் கவிஞரையும் திட்டித் தீர்க்கின்ற பலவீனரை மன்னிப்பதைத் தவிர வேறென்ன செய்வது?

தமிழகத்தில் புதுக் கவியின் முன்னோடியான மு. மேத்தா வின் புதுக்கவிதை நூலொன்றை பல்கலைக் கழகப் பாட நூலாக தமிழக அரசு அங்கீகரித்தசெய்தியை ஜீரணிக்க முடியாத மரபுக் கவிஞர்கள், எத்தனையோ இளம் எழுத்தாளர்; கவிஞர்களின் இலக்கியஉலகப்பிரவேசத்திற்கு புதுக்கவிதைகை [illegible] உதவுவது

( மீதி கடைசிப் பக்கம்... )

★ அன்பளிப்பு: ரூ. 1/- ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன சாட்சி

என் பயணத்தில் பாதைகளை
இணைக்காதே... ஏனெனில்,
பாலையில்தான் என் பயணம்
இதயத்திரையில்
வெளிச்சத்தை எரிக்காதே...
தீர்ந்து போன விளக்கின் ஒளியில்
பாவக்கறை படியும் நிழல்களைத் தேடி
நிஜங்களை ஊமையாக்கி
போதும்... போய்விடு!
நைந்து போன மனப்பதிவுகளை
தேடாதே. சருகுவேளை,
உன்னையே குற்றவாளியாய்
பிளந்து காட்டும்...!

★ மெஹ்ருன் நிஷா றிஸாட்

## கவிதை

இதயத்திலே எழுகின்ற
எண்ணத்தின் கோலங்கள்
கருத்துக் கோர்வைகளாய்
காகிதப் போர்வையுள் சேரும்
அச்சியந்திர அன்னை
பெற்றெடுத்த மழலைகள்
மழையோ வெய்யிலே விழுங்கிட
முடியாத சொத்து!

★ ரஞ்ஜினி சரவணமுத்து

## நொடிக்குள்...?

அரும் பாடுபட்டு அணுவணுவாக
அரிய புண்ணியத் (தானியத்) தை
நேர்வழி தாழ் திறந்து
நெஞ்சக் களஞ்சியத்தில்
சேர்த்து வந்தேன் நெடுநாளாக
நொடிக்குள்... பாவ எலிகள்
ஆசைதுளையிட்டு நுழைந்ததனால்
நெஞ்சக் களஞ்சியம்
கணப் பொழுதில்... காலியாகி,
நான்...?
நொடிக்குள் பாவியானேன்,...!

★ குறைஷா மொஹிடீன்

## மாற்றம் தேவை

அப்பா...!
தம்பியை ஏன்
தண்டித்தீர்கள்...?
சுண்டுவிரல் தூக்கினான்
என்பதற்காகவா?
இதிலென்ன தவறு...?
என்னையும் இப்படித்தான்
முன்னர் தடுத்தீர்கள்
அதனால்தான் இன்று
எங்கள் வீட்டுக்
கோழிக் குஞ்சுகளை
கதறக் கதறத்
தூக்கிச் சென்று
கொடிய பருந்துகள்
கண்களைக் கொத்தும்போது
நான்... கண்ணீர் மல்கிக்
கை பிசைந்து நிற்கின்றேன்
எனவே..!
தம்பியை விடுங்கள்
கொடியபருந்துகளை வீழ்த்த
அவன் இப்போதே
குறிவைதுப் பழகட்டும்...!

★ நிலா தமிழின் தாசன்

## பட்டம்

எங்கள் வாழ்க்கையில்..
தென்றலும் புயலாய் மாறும்
இன்னிசை கூட இடிஓலியாகும்
டி.வி யுமில்லை... வானொலியுமில்லை
ஆனால்..?
டீ.பி யின் காட்சியும் பரிச்சயமும்
தினமும் ஒலிக்கும்
மண்குடிசைதானெம் வீடு
கூரையில் இந்திரனின் கண்கள்
இயற்கையின் அழுகையால்
குட்டைகள் ஆகும் குடிசைகள்.
உலக கல்லூரி
எமக்களித்த பட்டம்
'பரதேசிப் பயல்கள்'

★ ஏ. எம். நஸீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றங்கள்

முதலிரவில்... பாலோடு
பழம் கொடுத்தவள்...
பின்னர்
காமச்சுவை பருகத்
தன்னுடலைக் கொடுத்தாள்
இன்று
வழக்காளி கூண்டில் நின்று
வாக்குமூலம் கொடுக்கிறாள்

★ அ. கௌரிதாஸன்

# தயாராகுங்கள்..!

கல்முனை
புதுமை கலை இலக்கிய வட்டம் தன் ஓராண்டு நிறைவையொட்டி நடாத்தும்,

# புதுக் கவிதைப் போட்டி!

கவர்ச்சியான பரிசுகளுடன் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்படும் விபரங்கள் தமிழ் தினசரிப்பத்திரிகைகளில் எதிர் பாருங்கள்...!

## சிறைவாசம்.

சிறைக் கூண்டில்
பிறந்திட்ட
என் செல்வ மகனே...
ஏன் அழுகிறாய்...?
கருக் கூண்டில்
உனக்கிருந்த களிப்பு
கலைந்துவிட்டதென்று
கண்மணியே அழுகிறாய்..?
அன்றி... இங்கு
ஆளும் கொடுமைகளை
அறிந்தா அழுகிறாய்...
தவறியே இம்மண்ணில்
தரித்திட்டோம் என்று
தேம்புகிறாய்...
இன்னும்
மகனே...... நீ...
நாளைக்கு வாலிபனாய்
ஆன பின்னும்
(அப்) பாவி உன் வாழ்வு
இச்சிறையிதான் முடியும்
என்பதை எண்ணும் போது
பெற்றெடுத்த
அன்னை நானே
அமுதூட்டும் கரங்களால்
நஞ்சு கொஞ்சம்
பருக்கி விடுகிறேன்
நிம்மதியாய் நீயாவது
நிரந்தரச் சிறைவாசம்
சென்றடை மகனே

★ எஸ். எம். எம். ரூபீக்

# காதோரம்!

அடுத்த
இதழில்
இடம் பெறும்.

வெளியீடு: கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுறுக் கவிதை.

எங்கள் சிற்றூர் வீடுகள்
அடையாளச் சுவடுகளே
தெரியாமல் உங்களால்
அழிக்கப்படலாம்
எங்கள் இசைக்கருவி
'ரப்பாக்' பறிக்கப்படலாம்
நரம்புகள் ஒடிக்கப்படலாம்
'ரப்பாக்' எரிககப்படலாம்
ஆனுல்...?
நாட்டுப்பற்றுமிக்க
காற்று மழையைப் பாடும்
இந்தக்கவிஞனின்
கவிதையை உங்களால்
துடைத்துவிட முடியாது !

★ அரபியில் : சலிம் சப்ரான்
தமிழில் : கல்முனைக் கலீல்

● ●

## ஒத்துழைப்பு

அதோ.. !
எங்கள் மந்திரி
சங்கரங்களின் தோளேறி
கரங்களைக் கூப்பிச்
சிரித்து வருகிறுர்
அலங்கார மேடையில்
ஏதேதோ
வார்த்தைச் சப்தங்களை
ஒலிபெருக்கி விநியோகிக்க
அதோ, எங்கள்
மந்திரி போகின்றுர்.
கூட்டம் பிரிந்து
வீட்டுக்குப் போனபின்
மந்தத் திரி விளக்கைக்
கண்டதும் மந்திரியின்
வரிகள் வெளிச்சமாகின
நாங்கள் விளக்குகளைப்போல
நீங்கள்......?
எண்ணெய்யைப் போல!

★ இப்னு அசூமத்

## ஏழையின் சிரிப்பில்?

கார் சூழ்ந்த நேரம்
கார் ஒன்று வந்தது
கார் தன்னில் வந்தவர்
பார்வை சென்றதோ
பதினறுவயதுப் பாவை மீது
கந்தலாடையும்
கண் சிமிட்டுமிளமையுமாய்
கையேந்தும் அவளுக்கு
இருபது ரூபாயை நீட்டி..
தான் ஏங்கிய இன்பத்திற்கு
இருட்டுக்கு அழைத்து......
ஓ...... இவர்கள்தான்
ஏழைகளின் சிரிப்பினில்
இறைவனை மட்டுமல்ல
உடல் இன்பமும்
காண்பவர்கள், சீச்...சீ...!

★ சிறீ தேவகாந்தன்

● ●

## தூது வருக!

கோடை வெய்யில்
கொளுத்தும் வேளை
ஓடைககரையில் உட்கார
வாடைக்காற்று வளமளிக்க
மேடை வந்த தூது,
மேலும் வளர்க !
வளரும் துளிரில்
வாழும் எண்ணங்கள்
புலரும் பொழுதில்
உலரும் பனி போலத்
தளரும் என்று
தாழ்த்துவோரின்
புன்மை நினைவு
புழுதி புரள, திண்மை ஓங்கி
தூய்மை பெருகத்
தூது வருக..!
தூசுகள் தூ...த்..தூ
என உதிர்க...!

★ சித்தி ஜெரீனு கரீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல மரபுக்கவிஞ தஉதவுவ தில்லை என்ற கசப்பான உண்மையையும் தெரிந்திரு த்தல் அவசியம்.

மாறி வரும் உலகமி தில் சில மரபுக் கவிஞர்கள் தம், மரபுப் போர்வையை உதறியெறிந்து விட்டு புதுக் கவிதையை வரவேற்றுப் பயன்படுத்தும் போது வேறு சிலர் இன்னும் மரபையே கட்டிப்பிடித்துக் கொண்டி ருப்பது அவர்களது புதுசுகளை ஜீரணிக்க முடியாத மனோபா வத்தையே காட்டுகின்றது. விசனிக்கத்தக்க இந்த நிலை மாறுவது, தமிழன்னையின் பொலிவை மெருகூட்டுவ தாய் அமையாதா...?

(ஆ--ர்)

★ **தூது**

'இலக்கியத் தூதே, இலட்சியத் தூது!'

ஆசிரியர் :
ஆர். எம். நௌஸாத்.

இணை ஆசிரியர் ;
எஸ். எம். எம். ரூபிக்.

அலுவல்கள் :
503. பிரதான வீதி
சாய்ந்தமருது- 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ[illegible] ரு' அச்சுச் சாதனங்களுடன் கல்முனை பைன் ஆர்ட் அச்சகத்தில் பதிப்பித்து வெளியிபவர் கல்முனை அபூ.